2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த பி.பார்மஸி வகுப்பு மாணவர்கள் வகுப்புக்கு வராமை குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானங்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சட்டப் பேரவை 42-வது விதியின் கீழ் '' the serious situation arising out of the strike by the students of B. Pharmacy class in Madras and Madurai Medical Colleges since 5th February 1973 for alleged failure to enforce prior assurance '' என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த பி.பார்மஸி மாணவர்கள் மதுரையிலே இருக்கக்கூடிய கல்லூரியிலும், சென்னையிலே இருக்கக்கூடிய கல்லூரியிலும தான் இருக்கிறார்கள். மதுரையில் 150 பேரும் சென்னையில் 150 பேரும் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள், இப்படி பி.பார்மசி படித்து பாஸ் செய்தபிறகு, பார்மசிஸ்ட்டுகளுக்கு முழு இடம் கொடுக்காமல் சில கெமிஸ்ட்ரி கிராஜுவேட்டுகளை வேலைக்கு எடுக்கிறார்கள். சர்க்காருடைய நிறுவனங்களிலே கூட நாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம். ஆகவே, குறைந்த அளவு உள்ள எங்களுக்கே அந்த உத்தரவாதம் இல்லாமலிருக்கிறது, அதை அளிக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள்.

அவர்கள் ஏற்கெனவே 5—2—1973-ம் தேதியன்று முதலமைச்சருக்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஹெல்த் மினிஸ்டர் அவர்களைச் சந்தித்ததாகவும், அப்படிச் சந்தித்தபொழுது அவர் சில வாக்குறுதிகள் கொடுத்ததாகவும் அந்த வாக்குறுதிகள் இன்றைக்கு அமுல் நடத்தப்படவில்லையென்றும் சொல்லப்படுகிறது. அவர்களோடு மட்டும் நிற்காமல், இன்றைக்குக் காலையில் வந்திருக்கிற செய்திகளைப் பார்க்கும்போது, பி.பார்மசி மாணவர்களுக்கு ஆதரவாக, சென்னையிலே இருக்கக்கூடிய மாணவர்கள் கூட வேலை நிறுத்தம் செய்யப்போகிறோம் என்று சொல்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே, குறைந்தபட்சமாக இருக்கக் கூடிய மாணவர்களாகிய அவர்களுக்கு, எந்த அளவுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறதோ அதற்குரிய முறையிலே உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது என்ற காரணத்தால், அரசு கொஞ்சம் சிம்பத்தெட்டிக்காக, கொஞ்சம் அனுதாபமான முறையிலே இதைக் கவனிக்க வேண்டும். அப்படிக் கவனிக்கவில்லையென்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகவே, அந்த முறையில் ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்களுக்கும், இனிமேல் பயிற்சி பெறப்போகிறவர்களுக்கும் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற அந்த முறையிலேதான் ஏதாவது பாத

காப்புக் கொடுக்கவேண்டும். அந்தப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டால் இந்தக் குறை வந்திருக்காது. ஆகவே, இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கான நிலையிலே அரசு சரியான உதவியைக் கொடுக்காமலிருப்பதால்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டி இருக்கிறது.

மெடிக்கல் காலேஜிலே இருக்கக் கூடிய பி.பார்மசி மாணவர்கள் எந்த முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள் என்ற விவரத்தையும் எந்த முறையிலே அவர்கள் வேலையிலே சேர்க்கப்படுகிறார்கள் என்ற விவரத்தையும் சபைக்குத் தெரியப்படுத்த உதவிகரமாக இருக்கும் என்ற முறையிலேதான் இந்த அவையை ஒத்திவைத்து இதை விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், மருத்துவக் கல்லூரியிலே உள்ள மருந்து கலப்பாளர் பிரிவில் பட்டம் பெறுவதற்குப் பயிற்சி பெறுகிற மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வது காரணமாக அந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள்.

ஒரு உண்மையை அவர்கள் உணரவில்லையென்று நான் கருதுகிறேன். அமைச்சரே உறுதிமொழி கொடுத்தார் என்று அவர் தெரிவித்தார். இதுவரையிலே உறுதிமொழி என்று எந்த ஒரு மொழியும் நான் அவர்களுக்குச் சொன்னதில்லை. ஆனால் எந்த ஒரு பிரச்சினையை மாணவர்கள் என்னிடத்திலே கொண்டு வந்தாலும் அதுபற்றி விரிவாகப் பரிசீலிக்கப்படும், ஆராயப்படும் என்று தெரிவித்திருக்கிறேன்.

அனுதாபத்தோடு பரிசீலிக்கவேண்டுமென்று அவர் சொன்னதைப் பொறுத்தவரையில் இந்தக் கழக அரசைப் பொறுத்தவரையில், எந்த ஒரு பிரச்சினையிலும் எந்த அளவுக்கு அரசால் முடியும், அல்லது தனியார் துறையாலே முடியும் என்றாலும் அதற்கு எந்த அளவுக்கு உதவமுடியும் என்று எண்ணிப் பார்க்கிற காரணத்தால், பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தேன். பரிசீலிக்கப்படும் என்று சொன்னது 'அஷ்யூரன்சாகிவிடும்' என்று சொன்னால், இனி என்ன சொன்னாலும், பரிசீலிக்க முடியாது என்று சொல்லவேண்டிய துர்ப்பாக்கியமான நிலை ஏற்படும்.

சில மாதங்களுக்கு முன்னால் இந்த மாணவர்களுக்குப் போதுமான அளவுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லையென்று என்னிடத்திலே தெரிவித்த பொழுது, அடுத்த ஆண்டில் அதிக மாணவர்களை சேர்க்காமலிருக்க ஒரு